283

சத்தியே துணை.



# இருக்கங்குடி மாரியம்மன் பத்திரசப்பாட்டு.

இஃது

பாலையம்பட்டி,

கண்ணன் குலதிலக பூ. பொயிலான் தாஸர்

இயற்றியது,

ஷையூர் வீ. ஆ. சுந்தரத்தேவர்

அருப்புக்கோட்டை

கு. கா. ச. மூகமது சுல்தான் இவர்கள்

பொருளுதவியால்,

அருப்புக்கோட்டை

அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1930 [அணா 1.

Q25:38·2119 IR
N30·
181227·

சத்தியே துணை.



# இருக்கங்குடி மாரியம்மன்

# பத்திரசப்பாட்டு.

இஃது
பாலையம்பட்டி,
கண்ணன் குலதிலக பூ. பொயிலரான் தீரர்
இயற்றியது,

SEP 1930

**ஷையூர் வீ. ஆ. சுந்தரத்தேவர்**
அருப்புக்கோட்டை
**கு. கா.ச. முகமது சுல்தான் இவர்கள்**
பொருளுதவியால்,

அருப்புக்கோட்டை
அருப்புக்கோட்டா பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1930 [அணா 1.

# இருக்கங்குடி மாரியம்மன் பேரில்

# பத்திரசப்பாட்டு

1 பருக்கமழும் பசத்தி மாதுலோக முப்புறத்தி
இருக்கங்குடி வாழ் சமர்த்தியாம் எங்கள் முத்து மாரி
ஏழைக்குகந்தவளாம் இருக்கங்குடி மாரி

2 ஏழைக்கருள் கொடுக்கும் இருக்கங்குடி யம்பிகையாள்
தானே வணங்குவோர்க்கு நம் தங்கமுத்து மாரி
சஞ்சலம் தவிர்த்தவளாம் இருக்கங்குடி மாரி

3 பஞ்சாட் சரத்தியடி பார்நிறைந்த சத்தியடி
மஞ்சளலங்காரியடியோ மாது மகமாயி
வரங்கொடுக்கும் தெய்வமடியோ மானிலத்தோர் தாயி

4 கந்தன் கணபதியைத் தந்த குணநிதியாம்
அந்தரந் தேய் வாய்வு அப்புமண் ஞான பராபரியாம்
ஆலமுண்ட கண்டன் சிவநாதன் மகிழ் பாரியாம்

5 ஆயிரங்கண்ணுடைய அம்பிகையை நம்பிடுவோர்
தாயினும் நல்லவளாம் தங்கமுத்து மாரி
தன்னையசாய் நின்றவளாம் இருக்கங்குடி மாரி

6 அண்டமுத லெண்டிசையும் அதனிற்பின் தேவரையும்
மண்டத்தில் யாபேருக்கும் மாதுமகமாயி
வாழ்த்திவரம் தந்தவளாம் மானிலத்தோர் தாயி

7 ஆலகால விஷத்தை அள்ளியுண்ட ஆச்சியடி
காலனைக் காலாலுதைத்த காரணி ரீங்காரி
அண்டர் கவலை யொழித்து நல்ல காக்ஷிதந்த மாரி

8 உருக்கமுடன் மேதினியில் உற்றவினை தீர்ப்பதற்கு
இருக்கங்குடி நன்னகரில் எங்கள்முத்து மாரி
தினம் இருந்துவரமே கொடுப்பா ளிருக்கங்குடி மாரி

9 வெள்ளி செவ்வாய்களிலே மெல்லிய ரோடாடவர்க்கும்
சொல்லி வரங்கொடுக்குமெய் ஜோதைமுத்து மாரி
பின்னுந் தொல்லைவினை தீர்த்தவளா மிருக்கங்குடி மாரி

10 மாணிக்க வல்லியடி மாயரூபி செல்வியடி
காணிக்கி வாய்த்தவடியோ கன்னிமுத்து மாரி
கொண்ட கவலைதனை தீர்த்தவடி யிருக்கங்குடி மாரி

17 முதண்ட காளியடி முக்கண்ணன் பாரியடி
கோதண்டன் தங்கையடி கோதைமுத்து மாரி
அவள் கோலாகல மங்கையடி இருக்கங்குடி மாரி

18 ஐந்து வயதினிலே அபியாப்பிராயத்திலே
கம்ஸனைக் கொல்லுதற்கு கன்னிமுத்து மாரி
அன்றுகலந்திருந்த ரகசியமாம் இருக்கங்குடி மாரி

19 செல்வத்துரைச்சியடி திருக்கண் ணுடையவடி
சொல்லவரி தானவடி கோதைமுத்து மாரி
நம்மள் சொந்தகுலதெய்வமடி யிருக்கங்குடி மாரி

20 போற்றுங்கடி அம்பிகையாள் பூம்பதத்தைப் போற்றுங்கடி,
சாற்றுங்கடி பூமலரைத் தங்கமுத்து மாரி
சந்தோஷமடைந்திடுவா ளிருக்கங்குடி மாரி

21 தேவி திருவுமையாள் சீர்தருமிருக்கங்குடி
கோவிலடையாளத்தைக்கூறு வேண்டி மயிலே
நல்லகுணமுடனே கேட்டிடுவாய் கோதையரே குயிலே

22 கோயிலுடையவளாம் குணமுடைய மாதவளாம்
தாயிலும் நல்லவளாம் தங்கமுத்து மாரி
சைலமெல்லாம் நின்றவளா மிருக்கங்குடி மாரி

11 அக்கினிச்சட்டிகளும் ஆடும்பொன் கரகங்களும்
திக்கினில் யாபேர்களும் தேடியோடிப்பாடி
கடன்செலுத்திட வருவாரடி தேனேபார் கோடாகோடி

12 கிடாய் காவுகொண்டவளாம் கீர்த்திதரும் அம்பிகையாம்
விடாய்தீர்க்கும் சஞ்சீவியா மெல்லி முத்துமாரி
தினம் வேண்டுவோரைக் காத்தவளா மிருக்கங்குடி மாரி

13 துஷ்டசம்மாரியடி துற்கையெனும் ஜோதியடி
கஷ்டந்தவிர்த்தவடி கன்னிமுத்து மாரி
தினம் கைகுவித்தால் முத்தி தருவா ளிருக்கங் குடி மாரி

14 முத்திகொடுக்கும் தவ மூர்த்தி சிவசத்தியவள்
பக்தியுடனே பணிந்தால் பாவைமுத்து மாரி
சிறுபாலகரைத்தான் தருவா ளிருக்கங்குடி மாரி

15 எள்ளுக்கு ளெண்ணெயைப்போல் லெங்கும் நிறைந்தவடி
உள்ளுக்கு ளுள்ளொளிவாம் உத்தமியாள் சமர்த்தி
என்னும் ஓமென்ற அட்சரமுதவும் பஞ்சாட்சரசத்தி

16 பொங்கலலங்காரியடி பூவையரே போற்றுங்கடி
மங்களகல்யாணியடி யோ மாதுமுத்து மாரி
கொண்ட வஞ்சனைகள் தீர்த்தவடி இருக்கங்குடி மாரி

23 எல்லையில்லாதவடி யேகாந்தமானவடி
தொல்லைப்பிறவிதனை நம் தோகைமுத்து மாரி
அன்று துலைத்துச் சுகம் தந்தவடி யிருக்கங்குடி மாரி

24 ஆடிமாதங்கடோசி ஆனதொரு வெள்ளியிலே
தேடிவரும் மானிடற்குச் செல்வமுத்து மாரி
துன்பம் தீர்த்துச் சுகம் தந்தவடி யிருக்கங்குடி மாரி

25 சுகமும் கொடுத்திடுவாள் தொல்லைவினை தீர்த்திடுவாள்
மகவே நீ பெற்றெடுக்கவே மாதுமுத்து மாரி
வரங்கொடுக்குந் தெய்வமடி யிருக்கன்குடி மாரி

26 திருக்கண்ணுடைய நம்மள் தேவியவள் தானிருக்கும்
இருக்கங்குடி மாநகரம் என்னருமைமயிலே
அன்று என்ன தவஞ் செய்ததோடி யின்பாசக்குயிலே

27 வாலைமனோன்மணியாள் வாளுஞ்சந்நிதானத்திற்கு
பாலைநகர் சுந்தரத்தேவரைப் பாவையரேவிழியே
பார்த்துவாடி கூட்டிச்செல்வோ மென் பஞ்சவர்ணக்கிளியே

28 சுந்தரத்தேவரொன்று சொல்லவந்தீர் மன்னவரே
சுந்தரமுள்ள இந்த நூலைச் சாற்றிட வல்லவரா
எந்தன் சாமியே அவர் மகிமையைச் சாற்றிடுவாய்தீரா

29 சாற்றுமென் சாந்தமடி தாமணிக்குக் காந்தமடி
நாட்டுக்குச் சிங்கமடி என் நாகரீகக் குயிலே
இந்த பாட்டுக் குகந்தவண்டி என் பாவையரோ மயிலே

30 பாட்டுக்குகந்த அந்தப் பாலகனும் சுந்தரத்தை
கூட்டுக்காடை வைத்தல்லவோ என்னோ தையலே விழியே
ஏய்த்துக்கொண்டுபோகப்பார்க்கிறாரடி கொஞ்சுங்கிளிமொழியே

21 ஏய்த்தால் விடுவதில்லை இனிமேலங்கு போவதில்லை
வாய்த்த பெரும் சத்தியமா யென் மரகதக் குயிலே
இப்போ வாடி கூடக் கூட்டிச் செல்வோம் வஞ்சியரே மயிலே

32 கூட்டி நடந்திடுவோம் கொற்றவனே என் கணவா
தாஷ்டீகஞ்சேர் சுந்தரத்தேவராம் தங்கக்களஞ்சியமே
நூலைச்சாற்ற வல்லதீராகுமெய் தானிது நிட்சயமே

33 நிக்ஷயமிருந்த இந்த நிகரில்லா நூலதனை
இச்சையுடன் பாடுதற்கு என் இன்பரசக்குயிலே
என்றும் அச்சமில்லை நிக்ஷயந்தா ஞைசை தருமயிலே

34 அச்சமில்லை யென்றுசொல்லி யன்பரே நீர் சொல்லவந்தீர்
இச்ஜெகத்தில் சுந்தரம் போலே என்னருமைக்கணவா
இங்கு இதைப்படிக்க வல்லோருண்டோ ரியம்பிடுவீர் நினைவாய்

35 இயம்புவேன் கேளடிநீ என்னருமைக்கண் மணியே
ஜெயம்பெற்ற சுந்தரத்தேவரே செம்பவளத்தொனியே யாரும்
தெரிந்து குற்றஞ்சொல்வாருண்டோடி செப்புவேன் கேளுநீயே

36 சுந்தரத்தேவருடன் சுல்தானும் நல்மணமாம்
வந்தபெருங்கூட்டத்திலே என்மணிச்சட்டமணியே
இதைவாசித்துத்தான் படித்திடவல்லவர் தான்கனியே

37 கேளுமனோன்மணியாள் வாளுஞ்சந்நிதானத்திலே
நாளுங்குறைவில்லாமலே நல்லவரங்கொடுப்பாள்
தினம் நம்புஞ்சில அன்பருடதுன்பந்தனைத்தடுப்பாள்

38 கைவளையலோலையடி கருகுமணிகொண்டவடி
தெய்வமடி பூவுலகில் தேவி முத்துமாரி
தன்னைத்தெரிசித்திட அன்பளிப்பாள் இருக்கன்குடிமாரி

39 வாசமலர்வதன மங்கையே யென்மாமயிலே
தாலன்பொயிலாணிசைச் சொல்தமிழ்பரிபளிக்கும்
இந்தத்தாலமீதிற் பாடுவோர்க்குச்சர்க்கரைபோலினிக்கும்

40 வாழிவாழிவாழியடி மானிலத்தோர் தான்வாழி
காளிகங்காளியடியோ கன்னிமுத்துமாரி
நல்லகாக்ஷிதரும் தெய்வமடி இருக்கன்குடிமாரி

சுபம்! சுபம்!! சுபம்!!!